## கோயம்புத்தூர் மாநகராட்சி

**அனுப்புநர்**

**முனைவர். ப. ராஜ்குமார், MA.,LLB.,Phd.,**
**மாண்புமிகு மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

**பெறுநர்**

மரியாதைக்குரிய துணை மேயர்
நிலைக்குழு தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
வார்டுக்குழு தலைவர்கள் மற்றும்
மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்து துறைத் தலைமைகள்,
மண்டல உதவி ஆணையாளர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் , ஊரக வளர்ச்சி,
மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை
அமைச்சர்,
(தொண்டாமுத்தூர் சட்டமன்ற தொகுதி)

பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோயம்புத்தூர், மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

சட்டமன்ற உறுப்பினர்கள்
(சிங்காநல்லூர், கோவை தெற்கு,
கோவை வடக்கு, கவுண்டம்பாளையம்,
கிணத்துக்கடவு சட்டமன்ற தொகுதிகள்)

**ந.க.எண் : 6311/2016 / எம்சி. 8 நாள் : 29.08.2016**

**அய்யா /அம்மா,**

**பொருள் :** கோயம்புத்தூர் மாநகராட்சி - மாமன்றக் கூட்டம் நடைபெறுதல் - நிகழ்ச்சி நிரல் அனுப்புதல் - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற அவசரக்கூட்டம் **31.08.2016 காலை 10.00 மணிக்கு** மாண்புமிகு மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அதுசமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்துத்துறை தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

**(ஒப்பம்) ப. ராஜ்குமார்**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

/உண்மை நகல் /

மாமன்ற செயலாளர்

**இணைப்பு : 1**

**நகல் :**

ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

# மாமன்ற அவசரக்கூட்டம் - ஆகஸ்ட் 2016

## நிகழ்ச்சி நிரல்

| பொருளடக்கம் | |
|---|---|
| | அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி |
| **வ.எண்** | **இ). தீர்மானத்திற்குரிய பொருள்கள்** |
| **1** | மாமன்ற பிரிவு - சாதாரண உள்ளாட்சித் தேர்தல் 2016- மக்கள் பிரதிநிதிகள் - பெண்களுக்கு 50 சதவீதம் ஒதுக்கீடு செய்து அரசிதழ் வெளியிடப்பட்டது – மாமன்றத்தில் பதிவு செய்தல் - தொடர்பாக |
| **2** | பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – புதிதாக தோற்றுவிக்கப்பட்ட ஐந்தாவது மண்டலம் – புதிய பணியிடங்கள் தோற்றுவித்து ஆணை வெளியிடப்பட்டது – மாமன்றத்தில் பதிவு செய்தல் - தொடர்பாக |
| **3** | மாமன்றப்பிரிவு - சாதாரண உள்ளாட்சித் தேர்தல் 2016- கோயம்புத்துார் மாநகராட்சி – 2016 உள்ளாட்சி தேர்தலுக்கு வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டது - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **4** | பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – தமிழ்நாடு மாநகராட்சிகள் ஆண்டு பொது பணியமைப்பு விதிகள் **1996–** வகுப்பு – **II** வகை – **3** மற்றும் **4**ன்படி நிர்வாக அலுவலர் மற்றும் கணக்கு அலுவலர் பணியிடங்களுக்கு வகுப்பு – **III**, பிரிவு – **I** வகை **1** மற்றும் **2**ல் உள்ள கண்காணிப்பாளர் மற்றும் உதவி வருவாய் அலுவலர்களின் தேர்ந்த பெயர் பட்டியல் – மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **5** | பணியமைப்பு– கோயம்புத்தூர் மாநகராட்சி – திரு. ப. செந்தில்குமார், பணிமாற்று அடிப்படையில் துப்புரவு ஆய்வாளர், தெற்கு மண்டலம் – கோயம்புத்தூர் மாநகராட்சியில் துப்புரவு ஆய்வாளராக நிரந்தரமாக மாறுதல் செய்தல் – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **6** | பணியமைப்பு– கோயம்புத்தூர் மாநகராட்சி – திரு. என். முருகேசன், பணிமாற்று அடிப்படையில் துப்புரவு ஆய்வாளர், மேற்கு மண்டலம் – கோயம்புத்தூர் மாநகராட்சியில் துப்புரவு ஆய்வாளராக நிரந்தரமாக மாறுதல் செய்தல்– மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **7** | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - வார்டு எண் 38 – பாலகுரு கார்டன் பகுதியில் மழைநீா் வடிகால் கட்டுதல் பணி – மதிப்பீடு ரூ. 75.00 இலட்சம் - மாமன்ற நிர்வாக அனுமதி கோருதல்- தொடர்பாக |
| **8** | பொறியியல் பிரிவு - மத்திய மண்டலம் - வார்டு எண் 81 – கூட்ஷெட் சாலையில் இஸ்மாயில் வீதி முதல் வி.எச். சாலை வரை வாய்க்கால் புதுப்பித்து நடைபாதை தளம் அமைத்தல் பணி - மதிப்பீடு ரூ. 62.00 இலட்சம் - மாமன்ற நிர்வாக அனுமதி கோருதல்- தொடர்பாக |
| **9** | வருவாய் பிரிவு -மேற்கு மண்டலம் - வருடாந்திர குத்தகை இனங்கள் - 2015-16-ம் ஆண்டிற்கு குத்தகைதாரர்களுக்கு 5% உயர்வு செய்து உரிமம் புதுப்பித்தல் மற்றும் சம்மத கடிதம் வழங்கப்படாத இனங்களை மறுஏலம் கொண்டு வருதல் - மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதி பெறப்பட்டது – மாமன்ற பின்னேற்பு கோருதல் - தொடர்பாக |

| | |
|---|---|
| **10** | வருவாய் பிரிவு -மேற்கு மண்டலம் -வருடாந்திர குத்தகை இனங்கள் - மேட்டுப்பாளையம் ரோடு புதிய பேருந்து நிலையத்தில் பேருந்து நுழைவு கட்டண வசூல் மற்றும் குளிரூட்டப்பட்ட ஆண்கள் பெண்கள் ஓய்வு அறை கட்டணம் வசூலிக்கும் உரிமம் மற்றும் இருசக்கரவாகனம் மற்றும் நான்கு சக்கரவாகனம் நிறுத்துமிடத்திற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம்- 2016-2019-க்கான பொது மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 17.02.2016-ல் நடைபெற்றது-உயா்ந்தபட்ச ஏலக்கோரிக்கையை ஏற்று உரிமம் ஒப்படை செய்தல் - மாண்புமிகு மேயா் அவா்களின் முன்அனுமதி பெறப்பட்டது – மாமன்ற பின்னேற்பு கோருதல் - தொடா்பாக |
| **11** | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - வாா்டு எண்.83- முத்து விநாயகா் கோவில் ரோடு வணிக வளாகத்தில் கடை எண்.12-க்கு (சதுரடி 120) உள்ள உரிமத்தை ரத்து செய்து மீண்டும் 2016-2019-ம் ஆண்டிற்கான பொது ஏலத்தில் சோ்த்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடா்பாக |
| **12** | கல்விப்பிரிவு - மாநகராட்சி ஒப்பணக்காரவீதி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் போதிய இடவசதி இல்லாததால் மாற்று ஏற்பாடாக அருகில் உள்ள மாநகராட்சி ம.ந.க.வீதி நடுநிலைப்பள்ளிக் கட்டிடங்களைப் பயன்படுத்த அனுமதி கோருதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடா்பாக |
| **13** | பொறியியல் பிரிவு - கோயம்புத்தூா் மாநகராட்சி –தெருவிளக்குகள் பராமரிப்பு பணிக்கு வைப்புத்தொகை செலுத்தியது – திரும்ப வழுநகுவது மாமன்றத்தின் அனுமதி கோருதல்– தொடா்பாக |
| **14** | பணியமைப்பு – கோயம்புத்தூா் மாநகராட்சி – திருமதி. எம். ராஜலட்சுமி, சாா்பு நீதிபதி/வரி விதிப்பு மற்றும் மேல்முறையீட்டுக்குழு தீா்ப்பாணையம் அவா்களின் மருத்துவ செலவிற்காக செலவிட்ட தொகையினை திரும்ப வழஙக கோருதல்– மாமன்றத்தின் அனுமதி கோருதல்– தொடா்பாக |
| **15** | வருவாய் பிரிவு - கிழக்கு மண்டலம் - சொத்து வரி விலக்கு மற்றும் வரிதாரா் செலுத்திய 50 சதவீதம் சொத்துவரித் தொகை திரும்ப செலுத்துதல் - கிழக்கு மண்டலம் வாா்டு எண் 36- அரவிந்தன் கண் மருத்துவமனை- கோவல் டிரஸ்ட் -சொத்து வரிவிதிப்பு விலக்கின் மீதான சென்னை உயா்நீதி மன்ற வழக்கு எண்.W.P.No:14414/1999, 14415/1999- உச்ச நீதிமன்ற வழக்கு எண். SLP (Civil)No.CC-22178-22179 of 2013 –தீா்ப்புரையின் படி கோவல் டிரஸ்ட் நிறுவனத்தினா் செலுத்திய சொத்துவரி தொகை ரூ. 50,64,662/-ஐ திரும்ப வழங்குதல்- மாமன்றத்தின் அனுமதி கோருதல்– தொடா்பாக |
| **16** | வருவாய் பிரிவு - கிழக்கு மண்டலம் - சொந்த கட்டிடம் இல்லாமல் தனியாா் கட்டிடத்தில் வாடகை அடிப்படையில் இயங்கி வரும் மாநகராட்சிப் பள்ளி சிங்காநல்லூா் (தெற்கு)- 2015-2016 மற்றும் 2016-2017-ல் (மாநகராட்சி சொந்த கட்டிடம் கட்டுமான நிலை முடிந்து கட்டிடம் பயன்பாட்டிற்கு வரும் நாள் முடிய) நிதியாண்டிற்கு வாடகை வழங்கப்பட வேண்டியது ரூ.57,096/- கீழ்கண்டபடி ஒரு பள்ளிக்கு கட்டிட உரிமையாளா்க்கு வழங்க மாண்புமிகு மேயா் அவா்களின் முன் அனுமதி பெறப்பட்டது - மாமன்றத்திற்கு பின்னேற்பு கோருதல்– தொடா்பாக |
| **17** | கல்விபிரிவு - கோயம்புத்தூா் மாநகரட்சி – மாநகராட்சி பள்ளிகளில் 10 மற்றும் 12-ம் வகுப்பு பயிலும் மாணவ,மாணவியருக்கு தினசரி மாலையில் சிறப்பு வகுப்புகள் நடைபெறுவது – சிறப்பு வகுப்புகளில் சிற்றுண்டி வழங்குதல் - மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளுதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடா்பாக |
| **18** | கோயமுத்தூா் மாநகராட்சி -கல்வி பிரிவு - மாநகராட்சி அனைத்து பள்ளிகளில் ஒப்பந்தம் அடிப்படையில் பணிபுரியும் காவலா்கள்,சுகாதார துப்புவுை பணியாளா்கள், துப்புரவு பணியாளா்கள்- புதிய ஒப்பந்தப்புள்ளி கோருதல் - புதிய ஒப்பந்ததாரா் நியமனம் செய்யும் வரை காலநீட்டிப்பு செய்தல் - மாமன்றத்தின் அனுமதி கோருதல்– தொடா்பாக |

| | |
|---|---|
| **19** | நகரமைப்புப் பிரிவு - கோயம்புத்தூர் மாநகராட்சி – வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.38, நகரளவு வார்டு எண்.27, பிளாக் எண்.25, நகரளவு எண்.98ல் உள்ள 51 சென்ட் இடம் – கோவை மாவட்டம், நீலகிரி கோட்டம், பீளமேடு தீயணைப்பு மீட்பு பணி நிலையம் அமைக்க நிலம் கோரியது தொடர்பாக மாநகராட்சியின் ஆட்சேபணையின்மை தெரிவித்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **20** | பொறியியல் பிரிவு - மாநகராட்சி பகுதிகளில் மாதிரி சாலைகள் உருவாக்குதல் - மாமன்ற நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **21** | பொறியியல் பிரிவு - கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வாகனங்கள் இயக்குபவர்கள் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்புடன் பயணம் செய்ய ஏற்றவகையில் சாலைகள் அமைத்தல், நிலையான நகரங்களுக்கு இடையேயான போக்குவரத்து மேம்பாடு நகர்புற, மாதிரி சாலைகள் வடிவமைத்தல், பசுமை பாதைகள் அமைத்தல், புவியியல் சார் ஆய்வுகள் மேற்கொள்ளுதல் – (NMT) அமைப்பின் கீழ் மிதிவண்டி பகிர்வு அமைப்பு திட்டத்திற்கான (Cycle Sharing System) விருப்பு கேட்பு அறிக்கை ( EOI) கோருதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **22** | பொறியியல் பிரிவு - மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் அமைத்தல் - இத்திட்டத்திற்கு தேவையான நிதியினை TUFISIL அல்லது TUFIDCO நிறுவனங்களிடம் இருந்து கடனாகவோ அல்லது அரசின் மானியமாகவோ பெற்று, இவ்விரு நிதிகள் போக மீதம் உள்ள தொகையினை மாநகராட்சி பொது நிதியின் மூலம் மேற்கொள்ளவும் இப்பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் நிர்வாக அனுமதி வேண்டி பிரேரணை அனுப்புதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **23** | பொறியியல் பிரிவு - மாநகராட்சிக்குட்பட்ட பகதிகளில் அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்குதல் மற்றும் வைப்புத்தொகை நிர்ணயம் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **24** | பொறியியல் பிரிவு - இணைக்கப்பட்ட பகுதிகளில் கவுண்டம்பாளையம் வடவள்ளி கூட்டு குடிநீர் திட்டம் மூலம் குடிநீர் வழங்குதல் - மதிப்பீட்டுத் தொகையினை தமிழ்நாடு குடிநீர் வாரியத்திற்கு செலுத்துதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |

**நன்றியுரை**

**அ) <u>திருக்குறள்</u>**

சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது.

**(குறள் - 647)**

**விளக்கம்**

தயக்கமும் அச்சமும் இன்றி, சொல்ல விரும்புவதைப் பிறர் உணரும்படிச் சொல்லும் வல்லமை உடையவர்களை, மாறுபட்ட கருத்துக்களைக் கூறி வெற்றி பெறுதல் மிக அரிது.

**திருவள்ளுவர்**

---------------------------------------------------------------------------

**ஆ) <u>தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி</u>**

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.

**பொருள் எண் 1**

| | |
|---|---|
| பொருள் : | சாதாரண உள்ளாட்சித் தேர்தல் 2016- மக்கள் பிரதிநிதிகள் - பெண்களுக்கு 50 சதவீதம் ஒதுக்கீடு செய்து அரசிதழ் வெளியிடப்பட்டது – மாமன்றத்தில் பதிவு செய்தல் - தொடர்பாக |
| பார்வை : | தமிழ்நாடு அரசிதழ் எண். 56, நாள் 27.02.2016. |

பார்வையில் காணும் தமிழ்நாடு அரசிதழில், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் மக்கள் பிரதிநிதிகளில் பெண்களுக்கான ஒதுக்கீட்டை 50 சதவீதமாக உயர்த்தி அரசிதழ் வெளியிடப்பட்டுள்ளது.

மேற்படி அரசிதழ் மாமன்றத்தின் தகவலுக்கும், பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - பதிவு செய்யலாம். ந.க.எண். 4129/16/எம்.சி. 8

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 51 நாள் 31.08.2016</u>**

பதிவு செய்யப்பட்டது

---

**பொருள் எண் 2**

பொருள்: பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – புதிதாக தோற்றுவிக்கப்பட்ட ஐந்தாவது மண்டலம் – புதிய பணியிடங்கள் தோற்றுவித்து ஆணை வெளியிடப்பட்டது – மன்றத்தின் பார்வைக்காகவும் மற்றும் பதிவிற்காகவும் அரசாணை சமர்ப்பித்தல் தொடர்பாக.

பார்வை: அரசாணை (நிலை) எண். 97, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந–4) துறை நாள் 03.08.2016.

------

பார்வையில் காணும் அரசாணையில், கோயம்புத்தூர் மாநகராட்சியில் புதிதாக தோற்றுவிக்கப்பட்டுள்ள ஐந்தாவது மண்டலத்திற்கு, 66 புதிய பணியிடங்கள் தோற்றுவித்து ஆணையிடப்பட்டுள்ளது. மேற்கண்ட அரசாணை மன்றத்தின் பார்வைக்காகவும் மற்றும் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: பதிவு செய்யலாம். ந.க.எண். 5734/2011 /எம்.சி.2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 52 நாள் 31.08.2016</u>**

பதிவு செய்யப்பட்டது

---

**பொருள் எண் 3**

| | |
|---|---|
| பொருள் - | சாதாரண உள்ளாட்சித் தேர்தல் 2016- கோயம்புத்தூர் மாநகராட்சி – 2016 உள்ளாட்சி தேர்தலுக்கு வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டது - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |

கோயம்புத்தூர் மாநகராட்சி சாதாரண உள்ளாட்சி தேர்தல் 2016-க்கு கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட 100 வார்டுகளில் 1197 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளது.

மேற்படி வாக்குச்சாவடி பட்டியலுக்கு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண். 4129/16/எம்.சி. 8

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 53 நாள் 31.08.2016</u>**

ஒப்புதல் அளிக்கப்பட்டது

---

**பொருள் எண் 4**

**பொருள் :** பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – தமிழ்நாடு மாநகராட்சிகள் ஆண்டு பொது பணியமைப்பு விதிகள் 1996– வகுப்பு – II வகை – 3 மற்றும் 4ன்படி நிர்வாக அலுவலர் மற்றும் கணக்கு அலுவலர் பணியிடங்களுக்கு வகுப்பு – III, பிரிவு – I வகை 1 மற்றும் 2ல் உள்ள கண்காணிப்பாளர் மற்றும் உதவி வருவாய் அலுவலர்களின் தேர்ந்த பெயர் பட்டியல் மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பித்தல் தொடர்பாக.

**பார்வை :**
1. அரசாணை எண்.237 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள்.26.09.1996
2. அரசாணை எண்.179, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள்.05.10.2009
3. இதே எண்ணிட்ட இவ்வலுவலக குறிப்பாணை நாள்.24.06.2016

-----

தமிழ்நாடு மாநகராட்சிகள் 1996ம் ஆண்டு பொது பணியமைப்பு விதிகள் வகுப்பு – II வகை – 3 மற்றும் 4ல் உள்ள நிர்வாக அலுவலர் மற்றும் கணக்கு அலுவலர் பணியிடங்களுக்கு வகுப்பு – III, பிரிவு – I வகை 1 மற்றும் 2ல் உள்ள கண்காணிப்பாளர் மற்றும் உதவி வருவாய் அலுவலர்களின் பணிமூப்பு பட்டியலின்படி நிரப்பலாம்.

இம்மாநகராட்சியில் நிர்வாக அலுவலர் / கணக்கு அலுவலர் பணியிடத்தில் ஏப்ரல் 2016 முதல் மார்ச் 2017 வரை ஓய்வு பெறுபவர்கள் யாரும் இல்லை.

01.01.2016ம் தேதிய நிலவரப்படி கண்காணிப்பாளர்/உதவி வருவாய் அலுவலர் பணிமூப்பு பட்டியலில் வரிசை எண்.1 முதல் 4 வரை உள்ள கீழ்க்கண்ட பணியாளர்களுக்கு இவ்வலுவலக செயல்முறை ஆணை ந.க.எண்.922/2015/எம்சி2 நாள்.04.01.2016ன்படி நிர்வாக அலுவலர் / கணக்கு அலுவலர் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண். | பெயர் (திருவாளர்கள் / திருமதி) |
|---|---|
| 1. | எஸ். வி. லட்சுமணன், கணக்கு அலுவலர் |
| 2. | எஸ். கணேஷ்குமார், கணக்கு அலுவலர் |
| 3. | டி. ராஜமாணிக்கம், நிர்வாக அலுவலர் |
| 4. | கே. மாணிக்கம் , கணக்கு அலுவலர் |

கோயம்புத்தூர் மாநகராட்சியில் எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டு ஐந்தாவது மண்டலம் தோற்றுவிக்கப்பட்டு ஒரு நிர்வாக அலுவலர், ஒரு கண்காணிப்பாளர் மற்றும் இரண்டு உதவி வருவாய் அலுவலர் பணியிடம் ( மத்திய மண்டலத்திற்கு ஒன்றும் பிரதான அலுவலகத்திற்கு ஒன்றும் ) தோற்றுவிக்க அரசுக்கு பிரேரணை அனுப்பப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.

இந்நிலையில் புதிதாக தோற்றுவிக்கப்பட்ட ஐந்தாவது மண்டலத்திற்கு தேவைப்படும் ஒரு நிர்வாக அலுவலர், ஒரு கண்காணிப்பாளர் மற்றும் 1 உதவி வருவாய் அலுவலர் மற்றும் பிரதான அலுவலகத்திற்கென பரிந்துரை செய்யப்பட்டுள்ள 1 உதவி வருவாய் அலுவலர் முதலிய 4 பணியிடங்களுக்கு பதவி உயர்வு வழங்கும் நிலை உருவாகும். எனவே 01.01.2016ம் தேதிய கண்காணிப்பாளர் / உதவி வருவாய் அலுவலர் பணிமூப்பு பட்டியலில் உள்ளவர்களில் தகுதி வாய்ந்த நபர்களுக்கு நிர்வாக அலுவலர் / கணக்கு அலுவலர் பதவி உயர்வு வழங்கலாம்.

பார்வை 2ல் காணும் அரசாணையின்படி நிர்வாக அலுவலராக பதவி உயர்வு வழங்க கண்காணிப்பாளர் அல்லது உதவி வருவாய் அலுவலர் பணியிடத்தில் 2 ஆண்டுகள் பணியாற்றியிருக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

01.01.2016ம் தேதிய கண்காணிப்பாளர் / உதவி வருவாய் அலுவலர் பணிமூப்பு பட்டியலில் வரிசை எண்.5 மற்றும் 6ல் உள்ள கீழ்க்கண்ட அலுவலர்கள் கண்காணிப்பாளர் / உதவி வருவாய் அலுவலர் பதவியில் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிந்து வருகின்றனர். இவர்கள் மீது குற்றச்சாட்டுகள் ஏதும் நிலுவையில் இல்லை. எனவே நிர்வாக அலுவலர் மற்றும் கணக்கு அலுவலர் பதவி உயர்வு வழங்க 01.01.2016ம் தேதிய நிலவரப்படி கீழ்க்கண்ட பணியாளர்களின் பெயர்களை 01.04.2016க்கான தேர்ந்த பெயர்ப்பட்டியலில் சேர்க்கலாம்.

| வ.எண். | பெயர் | பதவியில் சேர்ந்த நாள் |
|---|---|---|
| 1 | திருமதி.பி. அன்பரசி, உ.வ.அ. | 24.07.2010 |
| 2 | திருமதி.வி. லீனா, கண்காணிப்பாளர் | 24.07.2010 |

மேலும் வகுப்பு – II வகை – 3 மற்றும் 4ல் உள்ள நிர்வாக அலுவலர் மற்றும் கணக்கு அலுவலர் பணியிடத்திற்கு பதவி உயர்வு வழங்க தேர்ந்த பெயர் பட்டியல் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :அனுமதிக்கலாம் ந.க.எண்.1402/2016/எம்சி2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 54 நாள் 31.08.2016**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 5**

**பொருள் :** பணியமைப்பு– கோயம்புத்தூர் மாநகராட்சி – திரு. ப. செந்தில்குமார், பணிமாற்று அடிப்படையில் துப்புரவு ஆய்வாளர், தெற்கு மண்டலம் – கோயம்புத்தூர் மாநகராட்சியில் துப்புரவு ஆய்வாளராக நிரந்தரமாக மாறுதல் செய்தல் – மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பித்தல் – தொடர்பாக.

**பார்வை :**
1. நகராட்சி நிர்வாக இயக்குர் அவர்களின் கடிதம் ந.க.எண். 4163/2014 நாள் 08.01.2015.
2. இவ்வலுவலக இதே எண்ணிட்ட செயல்முறை ஆணை நாள் 20.01.2015.
3. திரு. ப. செந்தில்குமார், துப்புரவு ஆய்வாளர், தெற்கு மண்டலம் அவர்களின் விண்ணப்பம் நாள் 09.06.2016.
4. ஆணையாளர் அவர்களின் ஆணை நாள்.25.07.2016.

---------

பார்வை 1ல் காணும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதத்தின்படி, போடிநாயக்கனூர் நகராட்சியில் பணிபுரிந்து வந்த திரு. ப. செந்தில்குமார் அவர்களை மாற்றுப்பணி அடிப்படையில் இம்மாநகராட்சியில் பணிபுரிய அனுமதித்து ஆணையிடப்பட்டதைத் தொடர்ந்து, மேற்படியார் இம்மாநகராட்சியில், 19.01.2015ந் தேதி முதல் துப்புரவு ஆய்வாளராகப் பணிபுரிந்து வருகிறார்.

பார்வை 2ல் காணும் விண்ணப்பத்தில், இம்மாநகராட்சி தெற்கு மண்டலத்தில் பணிமாற்று அடிப்படையில் பணிபுரிந்து வரும் திரு. ப. செந்தில்குமார், துப்புரவு ஆய்வாளர், தெற்கு மண்டலம் அவர்கள் தன்னை இம்மாநகராட்சியிலேயே நிரந்தரமாக மாறுதல் செய்ய மாமன்ற தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு பரிந்துரை செய்து அனுப்பி வைக்குமாறு கோரியுள்ளார்.

இம்மாநகராட்சியில் தற்போது திரு. ப. செந்தில்குமார் அவர்களது பணியிடம் அல்லாது 4 துப்புரவு ஆய்வாளர் பணியிடங்கள் காலியாக உள்ளன. எனவே மாற்றுப்பணி அடிப்படையில் துப்புரவு ஆய்வாளராகப் பணிபுரிந்து வரும் திரு. ப. செந்தில்குமார் அவர்களை இம்மாநகராட்சியிலேயே நிரந்தரமாக பணியமர்த்த மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> : அனுமதிக்கலாம்.. மாமன்ற அனுமதிக்குப்பின் மேற்படி தீர்மானத்தை நகராட்சி நிர்வாக ஆணையாளர் வழியாக அரசின் அனுமதிக்கு அனுப்பி வைக்கலாம்.

ந.க.எண். 382 /2015/எம்சி.3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 55 நாள் 31.08.2016**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 6**

**பொருள் :** பணியமைப்பு– கோயம்புத்தூர் மாநகராட்சி – திரு. என். முருகேசன், பணிமாற்று அடிப்படையில் துப்புரவு ஆய்வாளர், மேற்கு மண்டலம் – கோயம்புத்தூர் மாநகராட்சியில் துப்புரவு ஆய்வாளராக நிரந்தரமாக மாறுதல் செய்தல் – மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பித்தல்– தொடர்பாக.

**பார்வை :**
1. நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண். 22240/2013/எம்சிஎ 2 நாள் 14.10.2014.
2. இவ்வலுவலக இதே எண்ணிட்ட செயல்முறை ஆணை நாள் 20.05.2015.
3. திரு. என். முருகேசன், துப்புரவு ஆய்வாளர் அவர்களின் விண்ணப்பம் நாள் 09.06.2016.
4. ஆணையாளர் அவர்களின் ஆணை நாள். 25.07.2016.

---------

பார்வை 1ல் காணும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதத்தின்படி, தூத்துக்குடி மாநகராட்சியில் பணிபுரிந்து வந்த திரு. என். முருகேசன் அவர்களை மாற்றுப்பணி அடிப்படையில் இம்மாநகராட்சியில் பணிபுரிய அனுமதித்து ஆணையிடப்பட்டதைத் தொடர்ந்து மேற்படியார் இம்மாநகராட்சியில் 13.04.2015ந் தேதி முதல் துப்புரவு ஆய்வாளராகப் பணிபுரிந்து வருகிறார்.

பார்வை 2ல் காணும் விண்ணப்பத்தில், இம்மாநகராட்சி மேற்கு மண்டலத்தில் மாற்றுப்பணி அடிப்படையில் பணிபுரிந்து வரும் திரு. என். முருகேசன், துப்புரவு ஆய்வாளர், அவர்கள் தன்னை இம்மாநகராட்சியிலேயே நிரந்தரமாக மாறுதல் செய்ய மாமன்ற தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு பரிந்துரை செய்து அனுப்பி வைக்குமாறு கோரியுள்ளார்.

இம்மாநகராட்சியில் தற்போது திரு. என். முருகேசன் அவர்களது பணியிடம் அல்லாது 4 துப்புரவு ஆய்வாளர் பணியிடங்கள் காலியாக உள்ளன. எனவே மாற்றுப்பணி அடிப்படையில் துப்புரவு ஆய்வாளராகப் பணிபுரிந்து வரும் திரு. என். முருகேசன் அவர்களை இம்மாநகராட்சியிலேயே நிரந்தரமாக பணியமர்த்த மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகங்க்குறிப்பு</u> : அனுமதிக்கலாம். . மாமன்ற அனுமதிக்குப்பின் மேற்படி தீர்மானத்தை நகராட்சி நிர்வாக ஆணையாளர் வழியாக அரசின் அனுமதிக்கு அனுப்பி வைக்கலாம்.

(ந.க.எண். 1423 /2013/எம்சி.3)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 56 நாள் 31.08.2016</u>**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 7**

கோயம்புத்தூர் மாநகராட்சி – வடக்கு மண்டலம் – பொறியியல் பிரிவு – வார்டு எண் 38–ல் உள்ள பாலகுரு கார்டன் பிரிவில் மழைநீர் வடிகால் வசதியில்லாததால் மழைக் காலங்களில் மழைநீர் தேஙகி சாலைகளில் சேதம் உண்டாகிறது. மழைநீர் தேஙகி கொசுக்கள் உற்பத்தி ஆகி சுகாதாரக் கேடாகிது. எனவே பாலகுரு கார்டன் பகுதியில் புதிதாக மழைநீர் வடிகால் கட்டும் பணிக்கு ரூ.75,00,000/– க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு, நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் சமர்பிக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண்.9398/2015/எம்.டி.2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 57 நாள் 31.08.2016</u>**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 8**

கோவை மாநகராட்சி மத்திய மண்டலம் பொறியியல் பிரிவு வா்டு எண் 81க்குட்பட்ட கூட்ஷெட் சாலையில் இஸ்மாயில் வீதி முதல் வி.எச். சாலை வரை உள்ள வாய்கால் புதுப்பித்து நடைபாதை தளம் அமைத்தல் பணிக்கு மதிப்பீடு ரூ. 62,00,000-க்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண் 12472/2015/ எம்.டி. 5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 58 நாள் 31.08.2016**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 9**

பொருள்: குத்தகை இனங்கள் - கோயம்புத்தூர் மாநகராட்சி - மேற்கு மண்டலம் வருடாந்திர குத்தகை இனங்கள் 2015-16-ம் ஆண்டிற்கு குத்தகைதாரர்களுக்கு 5% உயர்வு செய்து உரிமம் புதுப்பித்தல் மற்றும் சம்மத கடிதம் வழங்கப்படாத இனங்களை மறுஏலம் கொண்டு வருவது - தொடர்பாக.

பார்வை : 1. அரசாணை எண்.78 நாள்.25.5.2009.
2. வரிவிதிப்பு மற்றும நிதிக்குழுவின் தீர்மான எண். 404 நாள்.29.02.2016
3. மாண்புமிகு மேயர் அவர்களின் முன்னேற்பு நாள். 03.03.2016

*****

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட குத்தகை இனங்களுக்கு பார்வையில் காணும் அரசாணையின்படி 2015-16-ல் வழங்கப்பட்ட உரிமைத்தொகையில் 5 சதவீதம் உயர்வு செய்தும், 2016-17-ம் ஆண்டிற்கான குத்தகைத்தொகையாக நிர்ணயம் செய்ய கீழ்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது.

| வ எண் | வரி விதிப்பு எண். | ஏலதாரர் பெயர் | குத்தகை இனங்கள் | குத்தகை காலம் | 2015-16-ம் ஆண்டிற்கான குத்தகை தொகை ரூ. | 2015-16-ம் ஆண்டு ஏலத் தொகையில் 5% உயர்வுக்கு பின் 16-17 குத்தகை தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1 | | திரு. A.ஜெய்லாபுதீன் | மேட்டுப்பாளையம் ரோட்டில் உள்ள எம்.ஜி.ஆர்.மொத்த காய்கறிமார்கெட்டில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் மற்றும் மார்கெட்டிற்கு வரும் வாகனங்களுக்கு நுழைவுக்கட்டணம் வசூலிக்கும் உரிமம். | 2015-16 முதல் 2017-18 வரை | 1,11,00,000 | 1,16,55,000 |

மேற்படி எம்.ஜி.ஆர்.மார்கெட் குத்தகை 2015-16ம் ஆண்டிற்கு திரு. A.ஜெய்லாபுதீன் என்பவருக்கு 17.02.2016 அன்று ஒப்படைக்கப்பட்டுள்ளது. 2016-17ம் ஆண்டிற்கு மீண்டும் 31.03.2017 வரை உடன் புதுபிக்கப்பட வேண்டும் கால அவகாசம் மிகவும் குறைவாக உள்ளதாலும், தேர்தல் தேதி அறிவிக்கப்படவுள்ளதாலும், உரிமம் புதுப்பிக்க சம்மதம் தெரிவித்த குத்தகைதாரருக்கு 2015-16ம் ஆண்டிற்கான ஏலத்தொகையில் 5 சதவீதம் உயர்வு செய்து 2016-17-ம் ஆண்டிற்கான குத்தகைத்தொகையாக நிர்ணயம் செய்து உரிமம் புதுப்பிக்க அவசர அவசியம் கருதி பார்வை 2-ல் கண்டவாறு மாண்புமிகு மேயர் அவர்களின முன்னேற்பு பெறப்பட்டுள்ளது. எனவே தற்போது மாமன்ற பின்னேற்புக்காக பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண்.10931 /2014/அ1(மே)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 59 நாள் 31.08.2016**

பின்னேற்பு வழங்கப்பட்டது

---

## பொருள் எண் 10

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வருடாந்திர குத்தகை இனங்கள் - 2016-2019-க்கான பொது மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 17.02.2016-ல் நடைபெற்றது – மின் ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது தொடர்பாக.

பார்வை :
1. பொதுமறு மின்ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடைபெற்ற நாள். 17.02.2016.
2. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண். 399 நாள். 29.02.2016.
3. மாண்புமிகு மேயர் அவர்களின் முன்னேற்பு நாள். 03.03.2016

*******

கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு மண்டலத்திற்குட்பட் வருடாந்திர குத்தகை இனங்களுக்கான பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் 17.02.2016 தேதியன்று நடைபெற்றது. இதில் உயர்ந்தபட்ச ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரிக்கைகள் வரப்பெற்ற விபரங்கள் கீழ்கண்டவாறு

| வ. எண் | குத்தகை இனங்கள் | அரசு நிர்ணயத் தொகை ரூ. | ஏலதாரர் பெயர் | உயர்ந்த பட்ச ஒப்பந்தப் புள்ளி தொகை ரூ | 4-வது ஏலம் | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | உயர்ந்த பட்ச மின் ஏலக் கேள்வி தொகை ரூ | உயர்ந்த பட்ச ஏலத் தொகை ரூ |
| 1 | மேட்டுப்பாளையம் ரோடு புதிய பேருந்து நிலையத்தில் பேருந்து நுழைவு கட்டண வசூல் மற்றும் குளிரூட்டப்பட்ட ஆண்கள் பெண்கள் ஓய்வு அறை கட்டணம் வசூலிக்கும் உரிமம். | 3,39, 000/- | L.ரவிக்குமார்<br>S.காளியப்பன்<br>வித்யாசாகர் | 9,99,999/-<br>13,00,000/-<br>7,25,000/- | -<br>3,49,500/- | 13,00,000/- |
| 2 | மேட்டுப்பாளையம் ரோடு புதிய பேருந்து நிலையத்தில் இருசக்கரவாகனம் மற்றும் நான்கு சக்கரவாகனம் நிறுத்துமிடத்திற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 9,47,000/- | C. சாந்தகுமார்<br>V.மணிவண்ணன்<br>S.ஆறுமுகம்<br>V.M..அப்துல் சுக்கூர் | 18,25,000/-<br>14,22,000/-<br>15,00,000/-<br>16,00,000/- | 21,40,000/- | 21,40,000/- |

வரிசை எண். 1

மேற்படி வருடாந்திர குத்தகை இனங்களுக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 1-ல் கண்ட இனத்திற்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி அளித்த திரு.S.காளியப்பன் மேற்படி மேட்டுப்பாளையம் ரோடு புதிய பேருந்து நிலையத்தில் பேருந்து நுழைவு கட்டண வசூல் மற்றும் குளிரூட்டப்பட்ட ஆண்கள் பெண்கள் ஓய்வு அறை கட்டணம் வசூலிக்கும் உரிமம் இனத்திற்கான ஏலத்தில் கலந்துக் கொள்ள உரிய ஏலத்தொகை செலுத்தி பதிவு செய்துள்ளார். மேலும் ஒப்பந்தப்புள்ளியின் போது திரு. S.காளியப்பன் அளித்த ஒப்பந்தப்புள்ளி உறையின் மேல் மேற்கு மண்டலம் புதிய பேருந்து நிலையம் வாகனம் வசூல் என குறிப்பிடப்பட்டிருந்து மேலும் ஒப்பந்தப்புள்ளி படிவத்தில் ஏல இனத்தின் பெயர் ஏதும் குறிப்பிடப்படவில்லை.

மேற்படி ஏலதாரர் திரு.S.காளியப்பன் 17.02.2016 அன்று ஒப்பந்தபுள்ளி மற்றும் மின் ஏலம் திறப்பு முடிவடைந்த பின்னர் மேற்கு மண்டல அலுவலகத்தில் ஒரு கடிதத்தை சமர்ப்பித்துள்ளார். அதில் தான் மேட்டுப்பாளையம் ரோடு புதிய பேருந்து நிலையத்தில் பேருந்து நுழைவு கட்டண வசூல் மற்றும் குளிரூட்டப்பட்ட ஆண்கள் பெண்கள் ஓய்வு அறை கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு மட்டுமே உரிய ஏல தொகை செலுத்தி பதிவு செய்துள்ளதாகவும் வேறு எந்த ஏல இனத்திற்கும் ஏல தொகை செலுத்தவில்லை எனவும் எனவே தான் ஏலம் இனம் குறிப்பிடமால் சமர்ப்பித்த ஒப்பந்தப்புள்ளி மேட்டுப்பாளையம் ரோடு புதிய பேருந்து நிலையத்தில் பேருந்து நுழைவு கட்டண வசூல் உரிமத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளதாக உறுதி அளித்துள்ளார்.

வரிசை எண். 2

மேற்படி வருடாந்திர குத்தகை இனங்களுக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 2-ல் கண்ட இனத்திற்கு அரசு மதிப்பான ரூ.9,47,000/- விட கூடுதலாக திரு.C.சாந்தகுமார் என்பவர் ரூ.21,40,000/-த்திற்கு மின் ஏலம் அளித்துள்ளார். உயர்ந்தபட்ச ஏல கோரிக்கை பெறப்பட்ட மேற்படி இனங்களை ஏலதாரர்களிடம் ஒப்படைக்க அவசர அவசியம் கருதி பார்வை 3-ல் கண்டவாறு மாண்புமிகு மேயர் அவர்களின் முன்னேற்பு பெறப்பட்டுள்ளது. எனவே தற்போது மாமன்ற பின்னேற்புக்காக பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது

அலுவலககுறிப்பு- அனுமதிக்கலாம் ந.க.எண். 9871/2015/A1(மே)

## மாநகர மன்ற தீர்மானம் எண் 60 நாள் 31.08.2016

பின்னேற்பு வழங்கப்பட்டது

---

### பொருள் எண் 11

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்டபட்ட வார்டு எண்.83-ல் முத்து விநாயகர் கோவில் ரோடு வணிக வளாகத்தில் கடை எண்.12-க்கு (சதுரடி 120) உள்ள உரிமத்தை ரத்து செய்து மீண்டும் 2016-2019-ம் ஆண்டிற்கான பொது ஏலத்தில் சேர்ப்பது – தொடர்பாக.

பார்வை- 1.மாமன்ற தீர்மான எண்.185 நாள்.27.07.2015.
2.திரு.A.K.ராஜ் அவர்களின் கடித நாள்.02.12.2015.
3.வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.397 நாள்.29.02.2016.

-------

பார்வை (1)-ல் காணும் மாமன்ற தீர்மானத்தின்படி கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்டபட்ட வார்டு எண்.83-ல் முத்து விநாயகர் கோவில் ரோடு வணிக வளாகத்தில் 120சதுரடி உள்ள கடை எண்.12 திரு.KA.K.ராஜ் அவர்களுக்கு மாத வாடகை ரூ.6500/--க்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு குத்தகை விதிகளின் படி உரிமைதாரரிடமிருந்து மேற்படி கடைக்கு ஒரு வருட வாடகை முன் வைப்புத்தொகை ரூ.78,000/-, வைப்புத்தொகை ரூ.50,000/- மற்றும் மின்சார வைப்புத்தொகை ரூ.1,000/- சேர்த்து கீழ் கண்டவாறு வசூல் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண். | கணக்கு தலைப்பு எண் | இரசீது எண் | நாள் | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | 4018 | 201502232567 | 23.02.2015 | 50,000/- |
| 2 | 4018 | 201502232581 | 23.02.2015 | 50,000/- |
| 3 | 4018 | 201508132874 | 13.08.2015 | 28,000/- |
| 4 | 4020 | 201508132877 | 13.08.2015 | 1,000/- |
| | | மொத்தம் ரூ. | | 1,29,000/- |

செலுத்தப்பட வேண்டிய நிலுவை த்தொகை கடை எண்.1 (உரிம எண்.8331704)-

| | |
|---|---|
| நவம்பர் 2015 வரை வாடகை நிலுவை | =ரூ.6,500/- |
| நவம்பர் 2015 அபராத வட்டி | =ரூ. 320/- |
| நவம்பர் 2015 சேவை வரி | =ரூ. 943/- |
| | ------------------- |
| | ரூ. 7,763/- |
| | ======== |

பார்வை 2-ல் காணும் கடித்தின் படி திரு.A.K.ராஜ் அவர்களால் கடையை தொடர்ந்து நடத்த முடியாத காரணத்தால் மாநகராட்சி வசம் கடையை ஒப்படைத்துவிட்டார்.

கடை ஒதுக்கீடு செய்து மூன்றாண்டு காலம் நடத்தாமல் ஒப்படை செய்ததால் அவர் செலுத்திய வைப்புத்தொகை ரூ.50,000/-(ரசீது எண்.2015022325671 நாள்.23.02.2015) பறிமுதல் செய்து மாநகராட்சி நிதியில் சேர்க்கலாம். திரு.A.K.ராஜ் அவர்கள் செப்டம்பர் 2015 மற்றும் அக்டோபர் 2015-ம் மாத்திற்கான வாடகையை செலுத்திவிட்டார். எனவே அவர் செலுத்திய ஒரு வருட வாடகை முன் வைப்புத்தொகையில் அவர் செலுத்த வேண்டிய நவம்பர் மாத வாடகை நிலுவைத்தொகை ரூ.7,763/-யை (நவம்பர் 2015-ம் மாத வாடகை, அபராத வட்டி மற்றும் சேவைவரியுடன்) ஈடுக்கட்டி மீதம் உள்ள ரூ.70,237/-யை திரும்ப வழங்கவும், பார்வை 1-ல் காணும் மாமன்றத்தின் மூலம் வழங்கப்பட்ட உரிமத்தை ரத்து செய்யவும், ஏல இனத்தில் சேர்த்து பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் ஒதுக்கீடு செய்யவும் அதற்கான செய்தித்தாள் விளம்பர கட்டண செலவினங்களை ஏற்கவும் அனுமதி வேண்டி வரிவதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டத்தில் வரிவதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.390 நாள்.29.12.2015-ன்படி அலுவலக குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - ஒப்புதல் அளிக்கலாம் ந.க. எண்.2100/2015/அ2(ம)

## மாநகர மன்ற தீர்மானம் எண் 61 நாள் 31.08.2016

ஒப்புதல் அளிக்கப்பட்டது

---

**பொருள் எண் 12**

பொருள்- நிர்வாகம் - கல்வி - கோயம்புத்தூர் மாநகராட்சி – மாநகராட்சி ஒப்பணக்காரவீதி பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு – போதிய இடவசதி இல்லாததால் மாற்று ஏற்பாடாக அருகில் உள்ள மாநகராட்சி ம.ந.க.வீதி நடுநிலைப்பள்ளிக் கட்டிடங்களைப் பயன்படுத்த அனுமதி கோருதல் - சார்பு.

பார்வை- மாண்பு மிகு மேயர் அவர்களின் ஆய்வு நாள்.03.06.2016

----

மாநகராட்சி நிர்வாகத்தின்கீழ் 16 - மேல்நிலைப் பள்ளிகள், 10 - உயர்நிலைப் பள்ளிகள், 15 - நடுநிலைப் பள்ளிகள், 41 - ஆரம்பப் பள்ளிகள் மற்றும் 1 – காதுகேளாதோர் உயர்நிலைப் பள்ளி என 83- பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன.

மாநகராட்சி ஒப்பணக்காரவீதி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 6 முதல் 12 வகுப்புகள் வரை செயல்பட்டு வருகிறது. 24 வகுப்பறைகள் மட்டுமே உள்ளன. கடந்த 5 ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து மாணவிகளின் சேர்க்கை அதிகரித்து வருகிறது. இப்பள்ளியின் பிரதான கட்டிடத்தின் போதுமான வகுப்பறைகள் அமைக்க இடவசதி இல்லாததால் ஏற்கனவே பள்ளியின் 6 ,7 மற்றும் 8-ம் வகுப்புகள் ரங்கேகவுடர் வீதியில் அமைந்துள்ள முன்னர் கல்யாணி அறக்கட்டளை ஆரம்பப்பள்ளி செயல்பட்டு வந்த கட்டிடத்தின் 10 வகுப்பறைகள் செயல்பட்டு வருகிறது.

தற்போது இவ்வாண்டில் 2016-17-ம் ஆண்டிற்கன் 6-ம் வகுப்பு மாணவியர் சேர்க்கையில் 250-க்கும் மேற்பட்ட மாணவியர் சேர்க்கப்பட்டுள்ளனர். இம்மாணவியற்கு மேற்படி இரண்டு இடங்களிலும் வகுப்பறைகளோ, போதிய இடவசதியில்லாததால், மரக்கார நஞ்சப்ப கவுடர் வீதியில் அமைந்துள்ள மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் பயன்படுத்தப்படாமல் உள்ள 6 வகுப்பறைகளில் மாநகராட்சி ஒப்பணக்காரவீதி பெண்கள் மேல்நிலைப்பள்ளியின் 6-ம் வகுப்பு பிரிவுகள் செயல்பட மாண்புமிகு மேயர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

எனவே மாநகராட்சி ம.ந.க.வீதி நடுநிலைப்பள்ளியில் பயனபடுத்தப்படாமல் உள்ள 6 வகுப்பறைகளை மாநகராட்சி ஒப்பணக்காரவீதி பெண்கள் மேல்நிலைப்பள்ளியின் 6-ம் வகுப்பு பிரிவுகளை செயல்படுத்த அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- ஒப்புதல் அளிக்கலாம். எண்.4272/2016/கே-7

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 62 நாள் 31.08.2016</u>**

ஒப்புதல் அளிக்கப்பட்டது

---

**பொருள் எண் 13**

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி தெருவிளக்குகள் பராமரிப்பு பணிக்கு வைப்புத்தொகை செலுத்தியது – திரும்ப வழஙகுவது மாமன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பு.

-----

கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தெருவிளக்குகள் பராமரிப்பு பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு தி/ள்.சால்ஜர் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட்., கோயம்புத்தூர் நிறுவனத்திற்கு மாமன்றத்தீர்மான எண்: **209,210** மற்றும் **211** நாள் **29.08.2008–** ன்படி பணி மேற்கொள்ள உத்தரவிடப்பட்டதைத் தொடர்ந்து மேற்படி நிறுவனத்தினரால் **01.10.2008** முதல் **30.06.2012** வரை கிழக்கு, வடக்கு மற்றும் தெற்கு மண்டலஙகளில் தெருவிளக்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இப்பணிகளுக்கு மேற்படி நிறுவனத்தனரால் வைப்புத்தொகையாக ஒவ்வொரு (பணிக்கும்) மண்டலத்திற்கும் தலா ரூ.**2,75,000/–** வீதம் மூன்று மண்டலஙகளுக்கு ரூ.**8,25,000/– 04.08.2008–**ல் செலுத்தப்பட்டுள்ளது.

மேற்படி ஒப்பந்ததாரரின் தெருவிளக்கு பராமரிப் பணிகள் **30.06.2012** உடன் முடிவடைந்துவிட்டது. இந்நிறுவனத்தினர் மேற்கொண்ட பணிகளுக்கு **2009 – 10**ம் வருடம் முதல் **2013–14**-ம் வருடம் முடிய தணிக்கை தடை ஏதுமில்லை இந்நிலையில் தி/ள்.சால்ஜர் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட்., கோயம்புத்தூர் நிறுவனத்தினர் தெருவிளக்கு பராமரிப்பிற்கு **3** பணிகளுக்கு செலுத்தியுள்ள வைப்புத்தொகை ரூ.**8,25,000/–**ஐ திரும்ப வழஙகக்கோரி **15.12.2015–**ல் விண்ணப்பித்துள்ளனர். மேற்படி வைப்புத்தொகையினை, காலவதியான நாளிலிருந்து **6** ஆண்டுகள் வரை மன்றத்தின் அனுமதி பெற்று வழஙகலாம் என அரசு ஆணை எண் எம்.எஸ்.(ஏ2) எண்: **621** ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை நாள் **08.04.1980–**ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, தி/எ.சால்ஜர் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட்., கோயம்புத்தூர் நிறுவனத்தார் தெருவிளக்கு பராமரிப்பு பணிக்காக செலுத்தியுள்ள **3** ஒப்பந்த வைப்புத்தொகைகளின் மொத்தம் **ரூ.8,25,000/–** (**ரூ.2,75,000 + ரூ.2,75,000 + ரூ.2,75,000**) – ஐ மேற்படி நிறுவனத்திற்கு வழஙகுவதற்கு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.**12304/2015**/எம்.டி.**3**

**மாநகர மன்ற தீர்மானம் எண் 63 நாள் 31.08.2016**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 14**

**பொருள்:** பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – திருமதி. எம். ராஜலட்சுமி, சார்பு நீதிபதி/வரி விதிப்பு மற்றும் மேல்முறையீட்டுக்குழு தீர்ப்பாணையம் அவர்களின் மருத்துவ செலவிற்காக செலவிட்ட தொகையினை திரும்ப வழஙக கோருதல் – தொடர்பாக

**பார்வை:** ஆணையாளர் அவர்களின் உத்திரவு நாள்.**10.08.2016.**

---

திருமதி. எம். ராஜலட்சுமி, சார்பு நீதிபதி அவர்கள், மருத்துவ செலவிற்காக கீழ்கண்டவாறு தொகை செலவிட்டதாக கோரி அத்தொகையினை திரும்ப வழஙகுமாறு கோரியுள்ளார்.

| | |
|---|---|
| **14.08.2014** முதல் **14.09.2014** வரை | ரூ. **22,576/–** |
| **19.06.2015** முதல் **03.07.2015** வரை | ரூ.**48,500/–** |
| **05.03.2015** முதல் **25.08.2015** வரை | ரூ.**27,775/–** |
| மொத்தம் | **ரூ.98,851/–** |

மேற்குறிப்பிட்டுள்ள தொகையினை நாளதுவரை திரும்ப பெறப்படவில்லை எனவும், அதற்கான கொடுப்பட்ட சான்றும் சமர்ப்பித்துள்ளார். மேற்படி மருத்துவ செலவு சீட்டுக்களை மாண்புமிகு மாவட்ட தலைமை நீதிபதி, கோயம்புத்தூர் அவர்களுக்கு சமர்ப்பித்ததில், கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு சார்பு நீதிபதி / வரிவிதிப்பு மற்றும் மேல்முறையீட்டுக்குழு தீர்ப்பாணையம் ஆக பணிமாறுதல் செய்யப்பட்டதால் தொகை வழஙக இயலாது என தெரிவித்து திருப்பப்பட்டதால், இம்மாநகராட்சி மூலம் மருத்துவ செலவு தொகையினை திரும்ப வழஙகுமாறு கோரியுள்ளார்.

திருமதி. எம். ராஜலட்சுமி, சார்பு நீதிபதி / வரிவதிப்பு மற்றும் மேல்முறையீட்டுக்குழு தீர்ப்பாணையம் அவர்கள் இம்மாநகராட்சியில் **21.11.2015**ம் முதல் அயற்பணியில் சேர்ந்துள்ளார். மேற்குறிப்பிட்டுள்ள தொகைகளுக்கான கொடுப்படா சான்றும் சமர்ப்பித்துள்ளார்.

எனவே, பார்வை **2**ல் காணும் ஆணையாளர் அவர்களின் உத்திரவின்படி, மேற்காண் மருத்துவ செலவினைத்தொகை ரூ.**98,851/–**ஐ மாநகராட்சி நிதியிலிருந்து வழஙகும் பட்சத்தில் இதனை அரசிடமிருந்து மீளப் பெற இயலாது என்பதால் மாமன்ற ஒப்புதல் பெற்று வழஙக மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண்.**11425/2015**/எம்.சி.**2**

**மாநகர மன்ற தீர்மானம் எண் 64 நாள் 31.08.2016**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 15

பொருள் - சொத்து வரி விலக்கு மற்றும் வரிதாரர் செலுத்திய 50 சதவீதம் சொத்துவரித்தொகை திரும்ப செலுத்துதல் - கிழக்கு மண்டலம் வார்டு எண் 36- அரவிந்தன் கண் மருத்துவமனை- கோவல் டிரஸ்ட் -சொத்து வரிவிதிப்பு விலக்கின் மீதான சென்னை உயர்நீதி மன்ற வழக்கு எண்.W.P.No:14414/1999, 14415/1999- உச்ச நீதிமன்ற வழக்கு எண். SLP (Civil)No.CC-22178-22179 of 2013 –தீர்ப்புரையின் படி கோவல் டிரஸ்ட் நிறுவனத்தினர் செலுத்திய சொத்துவரி தொகை ரூ. 50,64,662/-ஐ திரும்ப வழங்குதல் - தொடர்பாக.

பார்வை - 1) வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 23, நாள் 09.01.2014.

2) மாமன்ற தீர்மானம் எண் 67 நாள் 25.06.2014.

------

சொத்து வரி விலக்கு மற்றும் வரிதாரர் செலுத்திய 50 சதவீதம் சொத்துவரித்தொகை திரும்ப செலுத்துதல் கிழக்கு மண்டலம் - வார்டு எண் 36- அரவிந்தன் கண் மருத்துவமனை- கோவல் டிரஸ்ட் -சொத்து வரிவிதிப்பின் விலக்கின் மீதான சென்னை உயர்நீதி மன்ற வழக்கு எண் :W.P.No:14414/1999, 14415/1999- உச்ச நீதிமன்ற வழக்கு எண் SLP (Civil)No.CC-22178-22179 of 2013 –தீர்ப்புரையின் படி கோவல் டிரஸ்ட் நிறுவனத்தினர் செலுத்திய சொத்துவரி தொகை 50,64,662/-ஐ திரும்ப வழங்குதல் தொடர்பாக மேல் முறையீடு செய்ய பார்வை 2 கண்டுள்ள மாமன்ற தீர்மானம் எண் 67 நாள் 25.06.2014 மீது மாமன்றம் தீர்மானிக்கப்பட்டது.

மாமன்ற தீர்மானத்தின் அடிப்படையில் மேல் முறையீடு செய்வதற்காக உச்ச நீதி மன்றத்தினில் தமிழ்நாடு மாநிலம் சார்பாக நியமிக்கப்பட்டுள்ள வழக்கறிஞர் திரு. B. பாலாஜி அவர்களிடம் கருத்துரு கோரப்பட்டது. திரு. B. பாலாஜி அவர்கள் இவ்வழக்கின் மீது மேல்முறையீடு செய்ய இயலக்கூடியதாக இல்லை என தனது கடித நாள். 14.07.2016-ல் தெரிவித்துள்ளார். எனவே, உயர் நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட தீர்ப்பினை உச்ச நீதிமன்றம் உறுதி செய்ததினை தொடர்ந்து மேல்முறையீடு செய்ய இயலாத நிலையில் தி/ள். கோவல் டிரஸ்ட் நிறுவனத்தினர் சொத்துவரியாக காளப்பட்டி பேரூராட்சியில் செலுத்திய தொை ரூ. 50,64,662/-ஐ இம்மாநகராட்சி திரும்ப வழங்குவது தொடர்பாக முடிவு செய்ய மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு - மாமன்ற முடிவிற்கு ந.க.எண். 8805/2013/கிசி4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 65 நாள் 31.08.2016**

பொருளை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 16

**பொருள் -** சொந்த கட்டிடம் இல்லாமல் தனியார் கட்டிடத்தில் வாடகை அடிப்படையில் இயங்கி வரும் மாநகராட்சிப் பள்ளி சிங்காநல்லூர் (தெற்கு)- 2015-2016 மற்றும் 2016-2017-ல் (மாநகராட்சி சொந்த கட்டிடம் கட்டுமான நிலை முடிந்து கட்டிடம் பயன்பாட்டிற்கு வரும் நாள் முடிய) நிதியாண்டிற்கு வாடகை வழங்கப்பட வேண்டியது ரூ.57,096/- கீழ்கண்டபடி ஒரு பள்ளிக்கு கட்டிட உரிமையாளர்க்கு வழங்க மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெறப்பட்டது - மாமன்றத்திற்கு பின்னேற்பு வழங்க வேண்டுவது – சார்பு.

-------------------

சொந்த கட்டிடம் இல்லாமல் தனியார் கட்டிடத்தில் வாடகை அடிப்படையில் இயங்கி வரும் மாநகராட்சிப் பள்ளி சிங்காநல்லூர் (தெற்கு)- 2015-2016 மற்றும் 2016-2017-ல் (மாநகராட்சி சொந்த கட்டிடம் கட்டுமான நிலை முடிந்து கட்டிடம் பயன்பாட்டிற்கு வரும் நாள் முடிய) நிதியாண்டிற்கு வாடகை வழங்கப்பட வேண்டியது ரூ.57,096/-

| வ.எண். | மாநகராட்சி பள்ளி முகவரி | மாதந்தோறும் வழங்கப்பட வேண்டிய வாடகை | மொத்தம் வழங்கப்பட வேண்டிய வாடகைத் தொகை | வழங்கப்பட வேண்டிய கட்டிட உரிமையாளர் |
|---|---|---|---|---|
| 1. | மாநகராட்சி ஆரம்பப்பள்ளி சிங்காநல்லூர் (தெற்கு) கோயம்புத்தூர். | 2015-2016<br>ரூ.2379X12<br><br>2016-2017<br>ரூ.2379X12 | Apl-15 To Mar-16<br>ரூ.28,548/-<br><br>Apl-16 To Mar-17<br>(மாநகராட்சி சொந்த கட்டிடம் கட்டுமான நிலை முடிந்து கட்டிடம் பயன்பாட்டிற்கு வரும் நாள் முடிய)<br>ரூ.28,548/- | செயலாளர், அஸ்தாந்திர கொல்ல சமூக சங்கம் எண்.1 அஸ்தாந்திர நாயக்கர் வீதி, சிங்காநல்லூர்-641 005. |
| | | **மொத்தம்** | **ரூ.57,096/-** | |

மேற்கண்டபடி வாடகைத் தொகை வழங்க கல்விப் பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள்குழு தீர்மான எண்.36 நாள்.15.06.2016-ன்படி, அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்காண் கல்விக்குழுத் தீர்மானத்தின்படி வாடகைத் தொகையாக ரூ.57,096/- கீழ்கண்டபடி ஒரு பள்ளிக்கு கட்டிட உரிமையாளர்க்கு வழங்க மாண்புமிகு மேயர் அவர்களின் 24.06.2016-ம் தேதிய உத்தரவின்படி முன்அனுமதி பெறப்பட்டது. பெறப்பட்ட முன்அனுமதிக்கான பின்னேற்பு வழங்க கோரி மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-ஒப்புதல் அளிக்கலாம். எண். 1905/2016/கே 14

**மாநகர மன்ற தீர்மானம் எண் 66 நாள் 31.08.2016**

ஒப்புதல் அளிக்கப்பட்டது

---

## பொருள் எண் 17

**பொருள்-** நிர்வாகம் - கல்வி - கோயம்புத்தூர் மாநகரட்சி – மாநகராட்சி பள்ளிகளில் 10 மற்றும் 12-ம் வகுப்பு பயிலும் மாணவ,மாணவியருக்கு தினசரி மாலையில் சிறப்பு வகுப்புகள் நடைபெறுவது – சிறப்பு வகுப்புகளில் சிற்றுண்டி வழங்குதல் - மாமன்ற அனுமதி பெற பொருள் வைத்தல் - சார்பு.

----

மாநகராட்சி மேல்நிலை மற்றும் உயர்நிலைப்பள்ளிகளில் 10 மற்றும் 12-ம் வகுப்பு பயிலும் மாணவ,மாணவியருக்கு மார்ச்/ஏப்ரல் 2017-ல் நடைபெறவுள்ள அரசு பொதுத் தேர்வுகளை எதிர் கொள்ள தயார் செய்யும் பொருட்டு, பள்ளிகளில் மாலை நேர சிறப்பு வகுப்புகள் துவங்குவதற்கு முன்மாணவ, மாணவியருக்கு சிற்றுண்டி வழங்க 2013-2014-ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் ரூ.100 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, சிற்றுண்டி சிறப்புற தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

இதன்காரணமாக பொதுத் தேர்வுகளின் தேர்ச்சி சதவிகிதமானது அதிகரித்தது மட்டுமல்லாமல் மாணவ,மாணவியர்களின் கல்வித்தரமும் உயர்ந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. எனவே இவ்வாண்டும் இத்திட்டத்தை சிறப்புற செயல்படுத்தும் பொருட்டு மாநகராட்சி மேல்நிலை மற்றும் உயர்நிலைப்பள்ளிகளில் 10 மற்றும் 12-ம் வகுப்பு பயிலும் மாணவ,மாணவியருக்கு மார்ச்/ஏப்ரல் 2017-ல் நடைபெறவுள்ள அரசு பொதுத் தேர்வுகளை எதிர் கொள்ள தயார் செய்யும் பொருட்டு, பள்ளிகளில் மாலை நேர சிறப்பு வகுப்புகளுக்கு கீழ்காண் சிற்றுண்டி வகைகள் வழங்கிட

**சிற்றுண்டிகளின் வகைகள்**

| வ.எண் | கிழமை | சுண்டல் வகை | நீர்மப்பொருள் | சிற்றுன்டி வகை |
|---|---|---|---|---|
| 1 | திங்கள் | கருப்பு சுண்டல்(Black Channa Sundal ) | போன்விட்டா (Bournvita) | நியூட்ரி பிஸ்கட் (Nutri Biscuit) |
| 2 | செவ்வாய் | மூங்தால் சுண்டல் (Moong Dal Sundal) | காய்கறி சூப் (Vegetale Soup) | கோதுமை பிஸ்கட் (Wheat Biscuit) |
| 3 | புதன் | சோயா சுண்டல் | பாதாம் பால் | உப்பு பிஸ்கட் |
| 4 | வியாழன் | வெள்ளை கொண்டைக் கடலை சுண்டல் | சத்து பால் (Nutri Milk) | இனிப்பு பிஸ்கட் |
| 5 | வெள்ளி | காய்கறி வடை | ஹார்லிக்ஸ் | பிஸ்தா பிஸ்கட் |

ஏற்படும் தோராய செலவினம் மதிப்பீடு செய்யப்பட்டு கீழே சமர்ப்பிக்கப்படுகிறது.

| வகுப்பு | மாணாக்கரின் எண்ணிக்கை | சிற்றுண்டி வழங்கப்படும் நாள் | நபர் ஒருவருக்கு ஒரு நாளைக்கு ஏற்படும் செலவினம் | தொகை 2X3X4 |
|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** |
| 12-ம் வகுப்பு | 2500 | 50 | 30 | 3750000 |
| 10-ம் வகுப்பு | 2500 | 75 | 30 | 5625000 |
| | | | **மொத்தம்** | **9375000** |

மேற்படி சிற்றுண்டி வழங்குவதற்கு ஏற்படும் தோராய செலவினம் ரூ.93,75,000/-ஐ மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும், கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு தொடர்ந்து சிறப்பு வகுப்புகளில் மாலை நேர சிற்றுண்டி வழங்க தகுதி வாய்ந்த நிறுவனத்தினை தேர்வு செய்ய ஒப்பந்த புள்ளிகள் கோர அனுமதி வேண்டி மாமன்ற ஒப்புதலுக்காக பொருள் வைக்கப்படுகிறது.

1. மாலை நேர சிறப்பு வகுப்புகளில் பயிலும் அனைத்து மாணாக்கர்களுக்கும் சரியான அளவில் சிற்றுண்டி வழங்கப்பட வேண்டும்.

2. சிற்றுண்டி நல்ல தரமானதாகவும், சுகாதாரமானதாகவும் இருக்க வேண்டும்.

3. உரிய நேரத்தில் மாணவ, மாணவியருக்கு சிற்றுண்டி வழங்கப்பட வேண்டும்.

4. சிற்றுண்டி தயாரித்து வினியோகிக்கும் முறை பாதுகாப்பானதாக இருக்க வேண்டும் இதனால் மாணவர்களுக்கு பின்விளைவு ஏற்படின் சம்பந்தப்பட்ட நிறுவனமே முழுப் பொறுப்பேற்க வேண்டும்.

5. போக்குவரத்து செலவு எதுவும் வழங்கப்பட மாட்டாது.

6. உணவு பொருட்களை வினியோகிக்கும் பொழுது தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை உபயோகப்படுத்தக்கூடாது.

அலுவலகக்குறிப்பு :- ஒப்புதல் அளிக்கலாம். எண். 5303 /2016 கே-12

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 67 நாள் 31.08.2016</u>**

ஒப்புதல் அளிக்கப்பட்டது

---

## பொருள் எண் 18

| | |
|---|---|
| பொருள்- | கோயமுத்தூர் மாநகராட்சி -கல்வி பிரிவு - மாநகராட்சி அனைத்து பள்ளிகளில் ஒப்பந்தம் அடிப்படையில் பணிபுரியும் காவலர்கள்,சுகாதார துப்புவை பணியாளர்கள், துப்புரவு பணியாளர்கள்- புதிய ஒப்பந்தப்புள்ளி கோருதல் - புதிய ஒப்பந்ததாரர் நியமனம் செய்யும் வரை காலநீட்டிப்பு செய்தல் அனுமதி வேண்டுதல்-தொடர்பாக. |

-------------

கோயமுத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலத்தில் 20 பள்ளிகள், தெற்கு மண்டலத்தில் 7 பள்ளிகளில், வடக்கு மண்டலத்தில் 11 பள்ளிகள், கிழக்கு மண்டலத்தில் 21 பள்ளிகள் மற்றும் மத்திய மண்டலத்தில் 26 பள்ளிகளில் பணிபுரிய காவலர்கள், சுகாதார துப்புரவு பணியாளர்கள், துப்புரவு பணியாளர்களை 8 மாத காலத்திற்கு துய்மை பணிகளை மேற்கோள்ள மதிப்பீட்டு தொகை ரூ.79.44 லட்சம், 43.45 லட்சம், 37.10 லட்சம், 69.96 லட்சம் மற்றும் 94.31 இலட்சத்திற்கு ஒப்பந்த புள்ளி கோரிய தி/ள்.சானிட் டெக்னாலிஜிஸ், கோவை நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

கோயமுத்தூர் மாநகராட்சியின் கீழ் இயங்கும் (20+7+11+21+26) பள்ளிகளுக்கு காவலர்கள், சுகாதார துப்புரவு பணியாளர்கள், துப்புரவு பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் தி/ள்.சானிட் டெக்னாலிஜிஸ், கோவை நிறுவனத்தார் மூலம் நடைபெற்று வரும் பணி காலம் 31.08.2016 உடன் முடிவடைகிறது.

எனவே, இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி புதிய ஒப்பந்தாரரை நியமனம் செய்யவும், புதிய ஒப்பந்ததாரரை நியமனம் செய்யும் வரை ஏற்கனவே மேற்படி பணிகளை மேற்கொண்டு வரும் தி/ள்.சானிட் டெக்னாலிஜிஸ், கோவை ஒப்பந்ததாரரையே ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் ஒப்பந்தப் புள்ளியில் குறிப்பிட்டுள்ள தொகை மற்றும் ஒப்பந்த நிபந்தனைகளின்படி கால நீட்டிப்பு செய்வதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண் 2761/2015/கே 11

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 68 நாள் 31.08.2016</u>**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 19

**பொருள்:** நிலம் – கோயம்புத்தூர் மாநகராட்சி – வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.38, நகரளவு வார்டு எண்.27, பிளாக் எண்.25, நகரளவு எண்.98ல் உள்ள 51 சென்ட் இடம் – கோவை மாவட்டம், நீலகிரி கோட்டம், பீளமேடு தீயணைப்பு மீட்பு பணி நிலையம் அமைக்க நிலம் கோரியது தொடர்பாக மாநகராட்சியின் ஆட்சேபணையின்மை கேட்டுக் கொண்டது – குறித்து.

**பார்வை:** வட்டாட்சியர், கோயம்புத்தூர் தெற்கு, கடிதம் ந.க.எண்.7536/2015/அ2, நாள்.20.01.2016.

*******

பார்வையில் கண்டுள்ள வட்டாட்சியர், கோயம்புத்தூர் தெற்கு, அவர்களின் கடிதத்தில் நீலகிரி கோட்டம், பீளமேடு தீயணைப்பு மீட்பு பணி நிலையம் அமைக்க, வார்டு எண்.38, நகரளவு வார்டு எண்.27, பிளாக் எண்.25, நகரளவு எண்.98ல் உள்ள 51 சென்ட் கோரியது தொடர்பாக மாநகராட்சியின் தீர்மானத்தினை அனுப்பி வைக்க கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. மேலும், மேற்படி இடம் கோவை (தெற்கு) வட்டம், சௌரிபாளையம் கிராமம், க.ச.எண். 463/14 நெ காலையில், 51 சென்ட் இடம் மயான புறம்போக்கு என கிராம ஆவணங்களில் உள்ளதாகவும், இவ்விடம் PSG தர்மஸ்தானத்தின் ஆக்கிரமிப்பில் இருந்து விடுவிக்கப்பட்டு தற்போது மேற்படி இடத்தை சுற்றிலும் சுற்றுசுவர் கட்டி கேட் போடப்பட்டு வருவாய்த் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி இடம் வருவாய் துறைக்கு சொந்தமானதாக இருப்பதாலும், தீயணைப்புத் துறை அவசரப்பணிகளில் மிக முக்கியமாக உயிர்கள் மற்றும் உடமைகளை காக்கும் துறையாக இருப்பதாலும், இந்த இடத்தினை தீயணைப்புத் துறைக்கு வழங்க மாநகராட்சியின் ஆட்சேபணையின்மையை தெரிவிக்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:- ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்.1639/2016/எம்.எச்.5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 69 நாள் 31.08.2016**

ஒப்புதல் அளிக்கப்பட்டது

---

## பொருள் எண் 20

கோயம்புத்தூர் மாநகராட்சி மாமன்றத் தீர்மான எண்190, நாள்27.07.2015 -ன் படி கீழ்கண்ட ஐந்து இடஙகளில் மோட்டார் இல்லாத போக்குவரத்து அமைப்பு (NMT) அமைக்கவும், அச்சாலைகளில் நடைபாதைகள் அமைக்கவும் தீர்மானிக்கப்பட்டது. மேலும் இச்சாலைகளை மேம்படுத்தப்பட்ட நடைபாதையுடன் கூடிய உயர்தரம் மற்றும் தொழில்நுட்பம் கொண்ட IRC பரிந்துரையில் உள்ளவாறு மாதிரி சாலைகளாக (MODEL ROAD) அமைக்க உத்தேசிக்கப்பட்டது.

1. என்.எஸ்.ஆர் ரோடு – வெங்கிட்டாபுரம் சாலை முதல் சாய்பாபா கோவில் வரை மற்றும் டி.வி.சாமி வீதி – தடாகம் ரோடு முதல் சுக்கிராவார்பேட்டை வரை
2. மசக்காளி பாளையம் ரோடு –1 (அவினாசி ரோடு சந்திப்பு முதல் மசக்காளி பாளையம் இணைப்பு சாலை வரை)
3. சஙகனூர் ரோடு – சக்தி பிரதான சாலை முதல் நல்லாம்பாளையம் சாலை வரை
4. ரேஸ்கோர்ஸ் வட்ட சாலை
5. மசக்காளி பாளையம் ரோடு – 2 ( ஜீ.வி ரெசிடென்சி சாலை முதல் திருச்சி சாலை வரை) மற்றும் டி.பி ரோடு

முதற்கட்டமாக மேற்காண் சாலைகளில் போக்குவரத்து மற்றும் மேம்பாட்டு கொள்கை நிறுவனம் ( Institute for Transportation and Development Policy ) ( ITDP) என்ற தன்னார்வு தொண்டு நிறுவனத்தாரால், ஆய்வு மற்றும் கண்காணிப்பு பணிகளில் ஒத்துழைப்புடன் கட்டிடக்கலை கணக்கெடுப்பு பணிகள் (Architectural Survey Works) மாதிரி சாலையின் வடிவம் (Model Road Design) திட்ட அறிக்கைகள் (Project Report) ஆகிய அனைத்து வகையான அறிக்கைகளையும் கீழ்கண்ட தகுதியான கட்டிட கலைஞர் ( Architect ) மூலம் மதிப்பீடு தயாரித்து மற்றும் மேற்பார்வையை மேற்கொள்ள மேற்படி பணியினை தொடர மாமன்ற தீர்மான எண். 354 நாள். 29.01.2016–ல் அனுமதிக்கப்பட்டது.

1. தி/ள்.பேட்க்ரோ கன்சல்டண்ட்ஸ்
2. தி/ள். டிசைன் கன்சார்டியம்
3. தி/ள்.யனப்படா ஆர்க்கிடெக்சர்
4. தி/ள்.அர்த்தகம் ஆர்க்கிடெக்சர்ஸ்
5. தி/ள்.வெல்சிட்டி கன்சல்டன்ஸ்

மாமன்றத் தீர்மானத்தின்படி, மேற்படி நிறுவனங்களுக்கு மாதிரி சாலையின் வடிவம் மற்றும் விரிவான திட்ட அறிக்கைகள் தயாரித்து வழஙக பணி உத்தரவு வழஙகப்பட்டது. இதனைத்தொடர்ந்து மேற்படி கீழ்கண்ட சாலைகளை மாதிரி சாலைகளாக வடிவமைப்பதற்குரிய வரைபடஙகள் மற்றும் திட்ட மதிப்பீட்டு அறிக்கைகள் சமர்ப்பித்துள்ளார்கள்.

| வ.எண் | சாலைகளின் பெயர் | மதிப்பீட்டு தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | சுக்கிராவார்பேட்டை சாலை முதல் லைட் ஹவுஸ் சாலை வரை (DB சாலை) | 70.00 |
| 2 | லைட் ஹவுஸ் சாலை முதல் ராமசந்திரா சாலை சந்திப்பு வரை (DB சாலை) | 60.00 |
| 3 | ராமசந்திரா சாலை சந்திப்பு முதல் டி.வி சாமி சாலை சந்திப்பு வரை (DBசாலை) | 60.00 |
| 4 | டி.வி சாமி சாலை சந்திப்பு முதல் பெரிய சாமி சாலை வரை(DB சாலை) | 60.00 |
| 5 | பெரிய சாமி சாலை முதல் கவுலிபிராவுன் சாலை வரை(DB சாலை) | 70.00 |
| 6 | மேட்டுபாளையம் பிராதன சாலை முதல் சர்சண்முகம் சாலை வரை (T V சாமி சாலை) | 55.00 |
| 7 | சர்சண்முகம் சாலை முதல் திவான்பகதூர் சாலை வரை(T V சாமி சாலை) | 55.00 |
| 8 | திவான்பகதூர் சாலை முதல் வெஙகடாசலம் சாலை வரை(T V சாமி சாலை) | 57.50 |
| 9 | வெஙகடாசலம் சாலை முதல் தாடகம் பிராதன சாலை வரை(T V சாமி சாலை) | 60.00 |

எனவே, மேற்காண் மாதிரி சாலைப்பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- அனுமதிக்கலாம் ந.க.எண் – 3384/13/எம்.டி.4

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 70 நாள் 31.08.2016</u>**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 21**

கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வாகனஙகள் இயக்குபவர்கள் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்புடன் பயணம் செய்ய ஏற்றவகையில் சாலைகள் அமைத்தல், நிலையான நகரஙகளுக்கு இடையேயான போக்குவரத்து மேம்பாடு நகர்புற, மாதிரி சாலைகள் வடிவமைத்தல், பசுமை பாதைகள் அமைத்தல், புவியியல் சார் ஆய்வுகள் மேற்கொள்ளுதல் போன்ற பணிகளுக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரித்து உரிய அனுமதிகள் அரசிடமிருந்து பெற மாமன்றத்தீர்மான எண்.76 நாள். 17.07.2015 ல் அனுமதி பெறப்பட்டுள்ளது.

எனவே முதற்கட்டமாக மேற்காண் சாலைகளில் போக்குவரத்து மற்றும் மேம்பாட்டு கொள்கை நிறுவனம் ( Institute for Transportation and Development Policy ) ( ITDP) என்ற தன்னார்வு தொண்டு நிறுவனத்தாரால், ஆய்வு மற்றும் கண்காணிப்பு பணிகளில் ஒத்துழைப்புடன் கட்டிடக்கலை கணக்கெடுப்பு பணிகள் (Architectural Survey Works) மாதிரி சாலையின் வடிவம் (Model Road Design) திட்ட அறிக்கைகள் (Project Report) ஆகிய அனைத்து வகையான அறிக்கைகளையும் தகுதியான கட்டிட கலைஞர் ( Architect ) மூலம் தயாரித்து மேற்படி பணியினை தொடர மாமன்றத்தின் அனுமதி பெறப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் (NMT) அமைப்பின் கீழ் மிதிவண்டி பகிர்வு அமைப்பு திட்டத்திற்கான (Cycle Sharing System) விருப்பு கேட்பு அறிக்கை ( EOI) கோர, மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- அனுமதிக்கலாம் ந.க.எண் – 3384/13/எம்.டி.4

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 71 நாள் 31.08.2016</u>**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் : 22**

வெள்ளலூர் பகுதியில் கோயமுத்தூர் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் அமைக்க திட்ட மதிப்பீடு ரூ.172 கோடிக்கு பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தொழில் நுட்ப தகுதியில் தேர்வு பெற்ற தி/ள். மகேந்திரா கன்சல்டிங இன்ஜினீயர்ஸ் நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழஙகப்பட்டது. மேலும், இது தொடர்பாக மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டு மாமன்றம் தனது தீர்மான எண்.269 நாள் 22.12.15-ல் ஒப்புதல் அளித்துள்ளது.

இதனைத் தொடர்ந்து இந்நிறுவனம் இடைக்கால திட்ட அறிக்கையினை தயாரித்து அளித்தனர். இடைக்கால திட்ட அறிக்கையினை இதே எண்ணிட்ட 04.11.2015-ம் தேதிய இவ்வலுவலக கடிதத்தின் வாயிலாக நகராட்சி நிர்வாக இயக்குனர் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

தற்பொழுது இத்திட்ட ஆலோசகர்கள், ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் அமைக்க 61.62 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.202.80 கோடி மதிப்பீட்டிற்கு 24.08.2016 அன்று இறுதி திட்ட அறிக்கை அளித்துள்ளனர்.

மேலும், இத்திட்டத்திற்கு தேவையான நிதியினை TUFISIL அல்லது TUFIDCO நிறுவனங்களிடம் இருந்து கடனாகவோ அல்லது அரசின் மானியமாகவோ பெற்று, இவ்விரு நிதிகள் போக மீதம் உள்ள தொகையினை மாநகராட்சி பொது நிதியின் மூலம் மேற்கொள்ளவும் இப்பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் நிர்வாக அனுமதி வேண்டி பிரேரணை அனுப்ப மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.2180/2015/எம்.டி.4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 72 நாள் 31.08.2016**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் : 23**

கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு மொத்த குடிநீர் இணைப்பு வழஙகும் போது ஒரு இணைப்புக்கு ரூ.5000/– வைப்புத் தொகையாக வசூலிக்கப்பட்டு வந்தது. மாமன்றத் தீர்மான எண்.158 தேதி 29.8.2013ன்படி திருத்தி அமைக்கப்பட்ட குடிநீர் துணை விதி 6ஆ 2ன்படி அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு வழஙகப்படும் மொத்த குடிநீர் இணைப்புக்கான வைப்புத் தொகை ரூ.10000/– வசூலிக்கப்பட வேண்டும் எனவும் ஒவ்வொரு வரிவிதிப்பிற்கும் வசூலிக்கப்பட வேண்டும் எனவும் உள்ளது. இதன் அடிப்படையில் கணக்கீடு செய்து 1.10.2013 முதல் மொத்த குடிநீர் இணைப்புகளுக்கு வைப்புத் தொகை வசூலிக்கப்பட்டு வருகிறது.

மாமன்றத் தீர்மான எண்.260 தேதி 19.10.2015 ல் பொது மக்களின் சுமையை குறைக்கும் பொருட்டு அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு வழஙகப்படும் மொத்த குடிநீர் இணைப்புகளுக்கு உரிய வைப்புத் தொகைகளை கீழ்கண்டவாறு திருத்தி அமைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி அளித்துள்ளதை தொடர்ந்து நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலக முதன்மை பொறியாளர் அவர்களுக்கு கருத்துரு அனுப்பப்பட்டது.

| குடியிருப்புகளின் எண்ணிக்கை | குடிநீர் வைப்புத் தொகை ரூபாய் | | |
|---|---|---|---|
| | 1.10.2013 தேதிக்கு முன்பு | தற்பொழுது நிலையிலுள்ளது | திருத்தி அமைக்கப்பட வேண்டியது |
| 20 | இணைப்பு ஒன்றுக்கு ரூ.5000/– | 20x10000/– 200000/– | இணைப்பு ஒன்றுக்கு ரூ.30,000/– |
| 21 முதல் 30 | | 30x10000/– 300000/– | இணைப்பு ஒன்றுக்கு ரூ.40,000/– |
| 31 முதல் 50 | | 50x10000/– 500000/– | இணைப்பு ஒன்றுக்கு ரூ.50,000/– |
| 51 முதல் 100 | | 100x10000/– 1000000/– | இணைப்பு ஒன்றுக்கு ரூ.70,000/– |
| 101 முதல் 150 | | 150x10000/– 1500000/– | இணைப்பு ஒன்றுக்கு ரூ.1,00,000/– |
| 150க்கு மேல் | | 150x10000/– 1500000/–மேல் | இணைப்பு ஒன்றுக்கு ரூ.1,50,000/– |

இந்நிலையில், Quality Assurance Control Manual ல் வைப்புதொகை அனைவரிடமும் வசூல்செய்யப்பட வேண்டும் என உள்ளதை நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்தில் தெரிவித்ததை தொடர்ந்து 26.07.2016 அன்று மாநகரப்பொறியாளர், கணக்கு அலுவலர், நிர்வாகப்பொறியாளர்கள், மற்றும் குடிநீர்விநியோக இளம்/உதவிப்பொறியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்ட கூட்டத்தில், குடிநீர் விநியோக துணைவிதிகள்(2013)-ன் படி அடுக்குமாடி குடியிருப்புகளுக்கான புதிய குடிநீர் இணைப்புக்கான வைப்புத்தொகை குறித்து நடைபெற்ற கூட்டத்தில், அடுக்குமாடி குடியிருப்பு சங்கத்தினர் அளித்துள்ள பல மனுக்களில் தற்போது புதியகுடிநீர் இணைப்புக்கான வைப்புத்தொகை ஒவ்வொரு குடியிருப்பிற்கும் ரூ.10,000/– என்பது மிகவும் அதிகமாக உள்ளது எனவும், வைப்புத்தொகையினை குறைத்து நிர்ணயம் செய்து தரவேண்டும் எனக் கூறியுள்ளதின் பேரில் பரிசீலிக்கப்பட்டு அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கும் பொழுது Quality Assurance control Manual -ல் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டுதலின்படி கீழ்கண்டவாறு இணைப்புகள் வழங்க மாமன்றத்தின் அனுமதிபெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளலாம் எனவும், அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு மற்ற குடியிருப்புகளுக்கு வழங்கப்படுவது போல் ரூ.5000 வைப்புத்தொகை (ஒவ்வொரு குடியிருப்பிற்கும்) வசூலிக்கலாம் எனவும் இதற்கு மாமன்றத்தின் ஒப்புதல் பெற்று மேல் நடடிக்கை எடுக்கலாம் எனவும் முடிவு செய்யப்பட்டது.

| வ.எண் | குடியிருப்புகளின் எண்ணிக்கை | குழாய்களின் அளவு | இணைப்புகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | 4 குடியிருப்பு வரை | 20 மி.மீ பயன்தரும் குழாய்<br>15 மி.மீ.திருகு குறுங்குழாய் | 1 எண்கள் |
| 2 | 5 முதல் 8 குடியிருப்பு வரை | 20 மி.மீ பயன்தரும் குழாய்<br>15 மி.மீ.திருகு குறுங்குழாய் | 2 எண்கள் |
| 3 | 9 முதல் 12 குடியிருப்பு வரை | 20 மி.மீ பயன்தரும் குழாய்<br>15 மி.மீ.திருகு குறுங்குழாய் | 3 எண்கள் |
| 4 | 13 முதல் 16 குடியிருப்பு வரை | 20 மி.மீ பயன்தரும் குழாய்<br>15 மி.மீ.திருகு குறுங்குழாய் | 4 எண்கள் |
| 5 | 17 முதல் 20 குடியிருப்பு வரை | 25 மி.மீ பயன்தரும் குழாய்<br>20 மி.மீ.திருகு குறுங்குழாய் | 5 எண்கள் |
| 6 | 21 முதல் 40 குடியிருப்பு வரை | 40 மி.மீ பயன்தரும் குழாய்<br>20 மி.மீ.திருகு குறுங்குழாய் | 6 எண்கள் |
| 7 | 41 முதல் 70 குடியிருப்பு வரை | 40 மி.மீ பயன்தரும் குழாய்<br>25 மி.மீ.திருகு குறுங்குழாய் | 7 எண்கள் |
| 8 | 70 குடியிருப்புகளுக்கு மேல் | 40 மி.மீ பயன்தரும் குழாய்<br>25 மி.மீ.திருகு குறுங்குழாய் | 8 எண்கள் |

எனவே மேற்காண் பட்டியலில் உள்ளவாறு அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு குடிநீர் இணைப்புகள் வழங்கவும் வைப்புத்தொகை மற்ற குடியிருப்புகளுக்கு வழங்கப்படுவது போல் ரூ.5000 வைப்புத்தொகை (ஒவ்வொரு குடியிருப்புதாரரிடமிருந்து) வசூல் செய்யவும் மேல்நடவடிக்கை தொடர மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண்.4848/2003/கு.வி.3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 73 நாள் 31.08.2016**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் : 24**

தமிழ்நாடு குடிநீர் வாரியம் கடிதம் எண் 1231/F.G &V/DB/JDO.1/2016 நாள். 15.07.2016 ன் அடிப்பயைில் கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட கவுண்டம்பாளையம், வடவள்ளி கூட்டு குடிநீர் திட்டம் 2010 ம் ஆண்டு துவஙகப்பட்டு இடைநிலை (intermediate stage) 2021 ம் ஆண்டிற்காக கணித்த மக்கள் தொகை 1,23,000 என மொத்தம் நீர் உந்து அளவாக 11 MLDயும் ஒரு நபருக்கு நாளொன்றுக்கு 70 லிட்டர் என அளவில் பொது மக்களுக்கு பயன்பாட்டுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

தற்பொழுது மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட கவுண்டம்பாளையம், வடவள்ளி பகுதிகளை ஒரு நபருக்கு நாளொன்றுக்கு 135 லிட்டர் வழஙக திட்டமிடப்பட்டுள்ளது. மேற்கண்ட மக்கள் தொகை 2011ம் ஆண்டில் அடைந்துள்ளது. தற்பொழுது கவுண்டம்பாளையம், வடவள்ளியின் மக்கள் தொகை சுமார் 1,60,000 என கணக்கிடப்பட்டுள்ளது.

கோயம்புத்தூர் வடக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினரின் அவர்களின் கோரிக்கையாக கவுண்டம்பாளையம், வடவள்ளி மக்கள் தொகை இடைநிலை (intermediate stage) அடைந்துவிட்டதை அடுத்து இறுதி நிலை (Ultimate stage) கூட்டு குடிநீர் திட்டத்தை போர் கால அடிப்படையில் செயல்படுத்துமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

எனவே, கவுண்டம்பாளையம், வட வள்ளி பகுதிகளுக்கு கூடுதலாக குடிநீர் வழங்க விரிவான திட்ட அறிக்கை (DPR) தயாரித்தல் மற்றும் குடிநீர் திட்டத்தை முழுமையாக பயன்பாட்டிற்க்கு இறுதி நிலைக்கு (Ultimate stage) செயல்படுத்தத்தேவையான மதிப்பீட்டுத்தொகையினை தமிழ்நாடு குடிநீர் வாரியத்திற்கு செலுத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :அனுமதிக்கலாம். ந.க.எண்.**7154**/2016/ப.வ

**மாநகர மன்ற தீர்மானம் எண் 74 நாள் 31.08.2016**

அனுமதிக்கப்பட்டது

---

**(ஒப்பம்) ப. ராஜ்குமார்**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**